இலவசமாக

Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-12426)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-12 | 28-08-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-192

## சிங்கள ஆட்சியாளர்களை நம்பிப் பயனில்லை

# தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கும் செயற்பாடுகளில் தீவிரம் காட்ட வேண்டும்!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**சிறிலங்காவில் மாறிமாறி தொடர்ந்து அதிகாரக் கைப்பற்றலுக்கான தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் தமிழீழத் தமிழர்கள் தங்களது தலைவிதியைத்தாங்களே தீர்மானித்துக் கொள்வதற்கான செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு நேற்று முன் தினம் அவர் வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை எங்களுடைய தாயகப் பிரதேசங்களில் செயற்படுத்திவருவதனால் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடி நிலைமைகளைச் சந்தித்துள்ளார்கள். ஒரு பதற்றமான நிலைமை நிலவிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தேர்தலுக்கான அறிவித்தல் வந்திருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ஏனெனில் சிங்கள தேசத்தில் அவர்களுடைய அக்கறை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது இந்த ஆட்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு இளைஞர் இருவர் ஆயுதக் குழுவால் கடத்தல்

(கொழும்பு)

மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் நீர் கொழும்பில் ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திவெளிப் பகுதியைச் சேர்ந்த காத்தமுத்து நல்லதம்பி, கந்தையா சசிகுமார் ஆகியோரை வானொன்றில் சென்ற நான்கு பேர் கொண்ட ஆயுதக் குழுவினர் கடத்தியுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. இவர்களை பொலிஸ் துறையைச் சேர்ந்தவர்களே கடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் நீர்கொழும்பில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (32)

## சனாதிபதி சந்திரிகா நேற்று சீனா பயணம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சீன சனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று இரவு சிறிலங்காவிலிருந்து புறப்பட்டார். சனாதிபதி குமாரதுங்க இந்த விஜயத்தின் போது அனல் மின் உற்பத்தித் திட்டம், கொழும்பு கட்டு நாயக்க கடுகதிவீதி அமைப்புத் திட்டம் ஆகியன உட்பட பல முக்கிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார் என்று சனாதிபதியின் செயலாளர் டபிள்யூ. யு. ஜே.எஸ் கருணாரத்ன தெரிவித்தார். அமைச்சர்கள் அநுரா பண்டாரநாயக்க, மகிந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது தாக்குதல்

(திருமலை)

மூதூர் தோப்பூர் பிரதேசத்தில் சிறிலங்கா படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று அதி காலை நடந்த இத்தாக்குதலில் படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதத்தின் கொச்சைப்படுத்தும் செயல் முழுத் தமிழினத்தையும் செயற்பட வைத்துள்ளது

### தமிழ்தேசிய எழுச்சி செயலணிக்குழு செயலர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ் மக்களின் உரிமை, உணர்வுகள் சிங்கள பேரினவாத அரசுகளினால் கொச்சைப் படுத்தப்பட்டமை மிகுந்த வேதனை தரும் விடயம் மட்டுமல்ல, அடுத்த கட்ட வழிமுறைகள் குறித்து விடுதலைப்புலிகளை மட்டு மல்லாது முழுத் தமிழினத்தையும் சிந்திக்கவும், செயற்படவும் வைத்துள்ளது.

இவ்வாறு நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வன்னி தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுடனான தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன கலந்துரையாடலின் போது தமிழ் தேசிய எழுச்சி செயலணிக் குழு செயலர் வேளமாலிகிதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி நகரில் எதிர்வரும் செப்ரெம்பர் 01 இல் நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வானது தமிழர் வரலாற்றில் முதன்மையானதும் வரலாற்று நன்மையுடையதுமாகும். கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களின் நேர்மைக்கும் தர்மத்தனத்துக்கும், சிங்கள அரசுகள் அளித்த ஏமாற்று வித்தையின் இறுதி வடிவமாகவே தற்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் ராஜனின் வீரவரலாறு விடுதலைப் போருக்கு வலுச்சேர்க்கிறது


### லெப். கேணல் ராஜன் நினைவு நிகழ்வில் க.வே.பாலகுமாரன்

(கிளிநொச்சி)

மாவீரர் லெப். கேணல் ராஜன் அவர்களின் வீரம் செறிந்த வரலாறு விடுதலைப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்துள்ளது.அம் மாவீரரின் நினைவு நாளில் தேசியத்தலைவர் அவர்கள் பற்றிய பொன்னகவை நூல் வெளியிடப்படுவது பொருத்தமானதாகும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற லெப். கேணல் ராஜன் அவர்களின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)





## "அஞ்சல் பெட்டி" பாத்திரத்திற்கு அப்பால் நோர்வே செயற்படுகின்றது —அநுரா

(கொழும்பு)

நோர்வே தனது "அஞ்சல் பெட்டி" பாத்திரத்திற்கு அப்பால் சென்று செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கம், நோர்வேயின் அனுசரணை குறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டி இருக்கும் என எச்சரித்துள்ளார். இந்தியா புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் ஆங்கில இதழ் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எரிக் சூல்ஹெய்ம் ஒரு முறை தன்னிடம் தாங்கள் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் தகவல்களைக் காவிச்செல்லும் தபால் பெட்டி வேலையை மாத்திரமே செய்வதாக கூறியதாக தெரிவித்த அநுர பண்டாரநாயக்க ஆனால் நோர்வே இப்போது தனது பாத்திரத்தைத் தாண்டி செயற்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

## சனாதிபதித் தேர்தலைச் சந்திக்க பொ.ஐ.மு.தீவிர ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி தீவிரம் காட்டிவருகிறது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் பாராளுமன்ற கட்டடத்தில் பொதுசன ஐக்கியமுன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது.

சனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டிலேயே நடத்தப்படவேண்டும் என்று சிறிலங்கா தலைமை நீதிமன்றம் அறிவித்ததையடுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. தேர்தலுக்கு இன்னும் சிலமாத காலமே உள்ளதால் பிரதமர் மகிந்த

(11 ஆம் பக்கம் பார்க்க)

# லெப்.கேணல் ராஜன் நினைவு நிகழ்வில்...







## இளைஞர், யுவதிகளுக்கு குறுங்கால தொழில் பயிற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் ஆண்டில் குறுங்கால தொழில் பயிற்சித்திட்டத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக நடைமுறைப் படுத்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கும் இளைஞர்,யுவதிகளுக்கு இத் திட்டத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஐந்து வகையான பயிற்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், இத்திட்டத்தில் இணைந்து பயிற்சிபெறும் ஒவ்வொருவருக்கும் பயிற்சிக்காலத்தின் போது உதவு தொகை வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படகு, வெளியிணைப்பு இயந்திரம் திருத்தம், மின்சார இணைப்பு, தண்ணீர் குழாய்கள் பொருத்துதல், கட்டடத்தொழில்,மரவேலைப் ஆகிய ஐந்து வகையான பயிற்சிகளை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளவிருப்பதாகவும், ஒவ்வொரு பயிற்சியிலும் 20 பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

## இரவுவேளைகளில் இராணுவ நடமாட்டம்; வெளியில்வர பொதுமக்கள் அச்சம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பகுதியில் கடந்த சில நாட்களாக இராணுவம் பொல்லுகள், தடிகள் மற்றும் வாள்களுடன் நடமாடுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றார்கள். இத்தகைய செயற்பாட்டின் மூலம் இரவு நேரங்களில் பொது மக்கள் நடமாடுவதற்கு பயந்து வெளியில் வருவதைத் தவிர்த்து வருவதாகவும் அப்பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் உந்துருளிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்பவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டும் பலத்த கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதும், அவர்கள் பயமுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் கூட இடம் பெற்று வருகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் பொதுமக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதியில் இருக்கும் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (28)

## தீவகம் மெலிஞ்சிமுனைப் பகுதியில் மலசலகூட குழியிலிருந்து எலும்புக்கூடு மீட்பு

(தீவகம்)

தீவகத்திலுள்ள ஊர்காவல்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மெலிஞ்சி முனைப்பகுதியில் இருந்து எலும்புக் கூடொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஊர் மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் உரிய இடத்திற்கு சென்ற கிராம அலுவலர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் மலசல கூட குழியில் இருந்து இம் மனித எலும்புக் கூட்டைமீட்டுள்ளனர்.

இம் மனித எலும்புக் கூடானது யாருடையதென இதுவரைக் கண்டுபிடிக்கப்படவில்லை இதனைப் பற்றி பல்வேறு சந்தேகங்களும் தெரிவிக்கப்படுகின்றன.கடந்த காலத்தில் காணாமல் போனவர்களுடையதாகவோ அன்றி ஈ.பி.டி.பி. யினரின் நடவடிக்கைகள் காரணமாக கொலை செய்யப்பட்டவராகவோ இருக்கலாமெனவும் பல்வேறு ஊகங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இது சம்பந்தமாக ஊர்காவல் துறைப் பொலிசில் கிராம அலுவலர் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். அதற்குப் பொலிசார் போதிய அக்கறை காட்டவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (41)

## படையினரால் வீடு சோதனையிடப்பட்டது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணை

(தென்மராட்சி)

கல்வயலிலுள்ள நகரசபை உத்தியோகத்தர் வீடு படையினரால் அத்துமீறி நுழைந்து சோதனை இடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக நேரடியான விசாரணைகளை மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

கல்வயல் சண்முகானந்த வீதியிலுள்ள இவ் உத்தியோகத்தர் வீட்டுக்குச்சென்று விசாரணை நடத்தியதுடன், இப்பகுதியிலுள்ள பல தரப்பினரிடமும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டனர்.

சம்பவத்தில் ஈடுபட்ட படையினர் தொடர்பான விபரம் மற்றும் காரணம் குறித்து இப் பிரதேச படை அதிகாரிகளிடம் தாம் கோரியிருப்பதாகவும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (28)

## வடகிழக்கு தபாலகங்களுக்கு தபால் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்குகிழக்கில் உள்ள தபால் அலுவலகங்களுக்கு பதினைந்து புதிய தபால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் நான்கு உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடபிரதேச பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலகத்திற்கு இருவரும், யாழ். பிராந்திய கணக்காளர் அலுவலகத்திற்கு ஒருவரும், யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (28)

## களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு; சந்தேகநபர் நீதிமன்றில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பல இடங்களில் களவாடப்பட்ட சுமார் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை முள்ளி யவளை காவல்பணிமனைப் பொறுப் பாளர் ஜெயகரன் தலைமையிலான குழு மீட்டுள்ளது.

இந்தப் பொருட்களை களவாடிய சந்தேகநபர் கைதுசெயயப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் முல்லை.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். (20)


## 08 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு
28
04
1978



வீரச்சாவு
28
08
1997

வீரவேங்கை ஈகைச்செல்வன்

{பரமசிவம் உதயசீலன் (உதயன்)}

இல-163/2 முரசுமோட்டை


நெருப்பாற்றை நீந்திக்கடந்து
நெடும் பயணம் சென்ற வீரனே
நீ நடந்த பாதையின்று – உன்
நினைவு சுமந்து நிற்கின்றது.

**இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

தகவல்:-
பரமசிவம்
குடும்பத்தினர்.

(6676)

## காணவில்லை கண்டவர்கள் தெரிவிக்கவும்



பிரான்ஸ்சவரி-ஜெறோம்கீதன் (கீதன்)

முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த பிரான்ஸ்சவரி-ஜெறோம்கீதன் (கீதன்) (வயது-30) என்பவர் கடந்த 13.08.2005 அன்று முள்ளியவளை செல்வதாகக்கூறிச் சென்றவர் இன்று வரைக்காணவில்லை. தயவுசெய்து இவரைப்பற்றித் தெரிந்தவர்கள் கீழ்க் குறிப்பிடும் முவரிக்கு தெரியப்படுத்தவும். இவர் பயணம் செய்தவாகனம் **MT9O-த13-4299** என்ற இலக்கமுடைய உந்துருளி ஆகும்.

முகவரி:-
ம.ஆனந்தன்,
செல்வபுரம்,
முல்லைத்தீவு.

**தகவல்:-
மைத்துனர்,
ம.ஆனந்தன்,
செல்வபுரம்.**

(சி.6605)

# சந்திரனில் குடியிருப்பு அமைக்க நாசா இடம் தேடுகிறதாம்

(வோஷிங்டன்)

**சந்திரனில் குடியிருப்பு அமைக்க அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (நாசா) இடம் தேடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான தீவிர ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.**

1970 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் அப்பலோ ரொக்கெட்டுகள் மூலம் நிலாவுக்கு சென்று அங்கிருந்து கல், மணலை எடுத்துக் கொண்டு பத்திரமாக பூமிக்கு திரும்பினார்கள்.

நிலாவில் இருந்து கொண்டுவரப்பட்ட கற்களை நாசா விஞ்ஞானிகள் தீவிரமாக பரிசோதித்தனர். அந்தக் கற்களில் தங்கம் இருக்கிறதா? வெள்ளி இருக்கிறதா?என்று ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் நிலா பயணத்தில் இருந்த ஆர்வம் படிப்படியாக குறைந்தது. கடந்த 30 ஆண்டுகளாக நிலாவுக்கு எந்தப் பயணமும் மேற்கொள்ளப் படவில்லை. நிலாவைப் பற்றிய ஆய்வுகளும் முடங்கிக் கிடந்தன.

இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக நிலாவின் மீது சில நாடுகளுக்கு மீண்டும் ஆர்வம் பிறந்துள்ளது. நிலாவுக்கு ரொக்கெட் அனுப்ப இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோ முடிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் தொய்வு இல்லாமல் நடந்து வருவதாக இந்திய சனாதிபதி அப்துல் காலம் கடந்த வாரம் பெங்களூரில் நடந்த விழாவில் கூறினார்.

இதேபோல் 'நாசா' வும் மீண்டும் நிலாப் பயணத்தை தொடங்க திட்டமிட்டு வருகின்றது. அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் சமீபத்தில் விஞ்ஞானிகள் கூட்டத்தில் பேசும்போது, ''விண்வெளி ஆய்வில் புதிய கண்ணோட்டத்துடன் ஈடுபட வேண்டும்" என்றும் 2018- ஆம் ஆண்டு நிலாவுக்கு மீண்டும் மனிதனை அனுப்ப வேண்டும். முடிந்தால் செவ்வாய்க்கும் மனிதனை அனுப்புவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார்.

அதிபர் புஷ் அளித்த உற்சாகம் அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு விண்வெளி ஆய்வில் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

நிலாவுக்கு மனிதனை அனுப்பி அவன் சந்தோசமாக நடந்து பார்த்து விட்டு மீண்டும் பூமிக்கு திரும்பும் வழக்கமான சுற்றுப் பயண மெல்லாம் இனிமேல் நடைமுறைக்கு உதவாது. அதற்கு மேலாக நிலாவில் மனிதன் வீடு கட்டி அங்கேயே குடி அமர வேண்டுமென்று ஆசைப்படுகிறது அமெரிக்கா. இதற்கான ஆய்வுகளை நாசா நிறுவனம் ஏற்கனவே தொடங்கி விட்டது.

நிலாவில் மனிதன் குடியேறுவதற்கு தகுந்த இடம் எது? என்பதை கண்டு பிடிப்பதே நாசா வின் முதல் கட்ட நடவடிக்கை ஆகும்.

நிலாவில் மனிதன் வசிப்பதற்கு தேவையான காற்றையும், மின்சாரத்தையும் உற்பத்தி செய்ய வேண்டும். அதற்குப் பயன் படும் கனிமங்கள் நிலாவில் எந்த இடத்தில் அதிகமாக கிடைக்கும் என்று ஆய்வு செய்யப்படுகின்றது. இதற்காக விண்வெளியில் நிறுவப் பட்டுள்ள ''ஹப்பிள் விண்வெளி தூர நோக்கிகள் மூலம் நிலாவின் ஒவ்வொரு பகுதியையும் துருவித் துருவி ஆய்வு செய்கிறது ஒரு விஞ்ஞானிகள் குழு.

## மரண தண்டனை விதிக்கப்பட்ட கறுப்பின பெண்ணைக் காப்பாற்ற முயற்சி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் ரெக்ராஸ் மாநிலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முதலாவது கறுப்பு இனப் பெண்ணை பாதுகாக்க சட்டத் தரணிகள் இறுதி நேரத்தில் பகிரத பிரயத்தனம் மேற் கொண்டு வரு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண்மணிக்கு நச்சு ஊசி மருந்து செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஏற்றப்பட்டு அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப் படவுள்ளது.

40 வயதுடைய பிரான்சிஸ் நியூற்றன் என்ற பெண் தமது கணவரையும், இரண்டு பிள்ளைகளையும் 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் படுகொலை செய்தார்.

காப்புறுதிப் பணமான ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை பெற்றுக் கொள்வதற்காகவே அவர் இந்தப் படு கொலையைச் செய்திருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்தப் படுகொலைகளுக்கு பெயர் குறிப்பிடாத மருந்து விற்பனையாளர் ஒருவரே பொறுப்பு என்று அப் பெண் கூறியுள்ளார்.

17 வருடங்களாக மரண தண்டனை வழங்கப்படும் பட்டியலில் இவர் இருந்துள்ளார். ரெக்சாஸ் மாநிலத்தில் மரண தண்டனைக்கு எதிராக மனித உரிமைக் குழுக்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

## புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் ஈராக்கிய தலைவர்கள் இணக்கம்

(பாக்தாத்)

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பான முக்கிய விடயங்களில் ஈராக்கிய தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளதாக அந் நாட்டு சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பான இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள அவர் இறுதி முடிவு நாளை வெளிவரும் எனவும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் யாப்பில் அடங்கியுள்ள சமஷ்டி தொடர்பான அம்சங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் சனாதிபதி சதாம் ஹூசைன் ஆதரவாளர்களும் ஷியாத் தலைவர் முஷ்தப்பா அல் -யசீரின் ஆதரவாளர்களும் தனித் தனியான ஆர்ப்பாட் டங்களை நடத்தியுள்ளனர். சன்னி முஸ்லிம்களின் வேண்டு கோளுக்கிணங்க அரசியல் யாப்பில் சில திருத்தங்களை கொண்டு வருவதற்கு ஷியா முஸ்லிம்கள் இணங்கியதாக சபாநாயகர் சபீர் அல்-ஹசானி தெரிவித்துள்ளார். எனினும் இது தொடர்பாக சன்னி முஸ்லிம் தலைவர்கள் சாதகமான பதில்களை தெரிவிக்கவில்லை எனவும் சபாநாயகர் தெரிவித் துள்ளார்.

## அமெரிக்க கடற்கரையை தாக்கிய கற்றினா சூறாவளிக்கு ஏழு பேர் பலி

அமெரிக்காவின் புளோரிடா கடற்கரையினை கற்றினா எனும் சூறாவளி பலமாகத் தாக்கியுள்ளது.

மக்கள் அடர்த்தியாக வாழும் தென் கிழக்கு புளோரிடா மாநிலத்தை முதலில் தாக்கியதில் ஏழு பேர் பலியாகியுள்ளனர்.

நியாமி பகுதியை தாக்கிய பின்னர் இந்த சூறாவளி வலு விழந்து காணப்பட்ட போதிலும், இப்போது சக்தி வாய்ந்த சூறாவளியாக மாறி வளைகுடா பகுதிக்கு சென்றுள்ளது. சூறாவளி மணித்தியாலத்திற்கு 100 மைல் வேகத்தில் வீசிக் கொண்டிருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இன்று இந்த சூறாவளி மேலும் வலுவடைந்து திங்கட் கிழமை மெக்சிக்கோ குடாவிலுள்ள அமெரிக்க எண்ணெய் மற்றும் எரிவாயு நிலையங்களை தாக்கக்கூடுமென எதிர்பார்க் கப்படுகின்றது.

ஏற்கனவே கரையோர குடியேற்றப் பகுதிகளை புளோரிடா தொடக்கம் தாழ்ந்த நியுஅல்சியன்ஸ் பகுதி வரை தாக்கியுள்ளது.



புளோரிடா மாநில ஆளுனர் தெரிவித்த தகவலில் சூறாவளி தாக்கத்தை எதிர் கொள்ள தாம் தயார் நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

## முஷாரப்பைக் கொலை செய்ய சதி செய்தனர் பாகிஸ்தானில் ஐவருக்கு மரண தண்டனை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை கொலை செய்ய மேற்கொண்ட சதி முயற்சியில் சம்பந்தப்பட்ட ஐந்து பேருக்கு மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் இராணுவ வீரர் ஒருவரும் அடங்குவார். இந்த சதி முயற்சியில் சம்பந்தப்பட்டு மரணதண்டனை விக்கப்பட்ட ஐந்து பேரின் விபரங்களை இராணுவப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் நேற்று முன்தினம் அறிவித்தார். எனினும் இவர்களுக்கான மரணதண்டனை எப்போது நிறை வேற்றப்படும் என்ற விபரத்தை அவர் வெளியிடவில்லை.

இந்தப் கொலை முயற்சியில் சம்பந்தப்பட்ட மற்றுமொரு வருக்கு ஆயுட்கால தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இருவருக்கு 15 முதல் 20 வருடங்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் எந்த நீதிமன்றம் இவர்களுக்கான தண்டனையை வழங்கியது என்ற விபரத்தை வெளியிடுவதற்கு மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் வெளியிட மறுத்துவிட்டார்.

2003 ஆம் ஆண்டு நத்தார் தினத்தன்று 15 இராணுவத்தின ரிடையே மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதலின் போது சனாதிபதி முசஷாரப் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இத் தாக்குதலின்போது 15பேர் உயிரிழந்தனர். இது அந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது படுகொலை முயற்சியாகும். இவ்விருதாக்குதலுக்கு பின்னர் இராணுவத்தினர் விமானப்படையினர் உட்படமற்றும் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

## சுரங்க வெடி விபத்து சீனாவில் 15 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக சுரங்கத் தொழிலாளர்கள் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச் சுரங்கத்தில் 21 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டி ருந்தனர். இதன் போது வெடி விபத்து ஏற்பட்டது. இதில் இருவர் தப்பி விட்டதாகவும், நான்கு பேரை மீட்புப் படையினர் மீட்டெடுத்ததாகவும், தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களில் ஆறு பேரின் சடலங்களே இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக அதிகா ரிகள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் சீனாவில் 123 சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்தில் உட்புகுந்த நீரில் சிக்கியமை குறிப்பிடத்தக்கது.

## காஸாவில் இருந்து யூதர்கள் வெளியேற்றம் இஸ்ரேலுக்கு அவமானமான ஒன்று

### கமாஸ் தலைவர்

(காஸா)

பலஸ்தீனத்தின் காஸா பகுதியிலிருந்து யூதக்குடியேற்றத் திட்டங்கள் வாபஸ் பெறப்பட்டிருப்பது இஸ்ரேலுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியிருப்பதாக கமாஸ் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீன தீவிரவாதிகளின் போராட்டம் தொடர்ந்து மேற் கொள்ளப்பட வேண்டுமென்று அவர் கேட்டுள் ளார்.

முகமத் கெய்ப் என்ற கமாஸ் தலைவர் இஸ்ரேலினால் தேடப்படுவோர் பட்டியலில் இடம்பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில் பலஸ்தீன சனாதிபதி மகமூட் அப்பாஸ் இந்த வார முற்பகுதியில் ரொய்டர் ஸ்தாபனத்திற்கு அளித்த பேட்டியில் பலஸ்தீன ஆயுதக் குழுக்கள்மோதல் போக்கைத் தவிர்த்து அமைதி வழியைப் பின் பற்ற வேண்டும் எனக் கேட்டுள்ளார். கமாஸ் தலைவர் விடுத்த கோரிக்கையில் தமது தாய கத்தின் மிகுதிப் பகுதிகளையும் விடுவிக்க போராட்டம் தொடர்ந்தும் நடைபெறும் என்று தெரிவித்தார்.

## நிவாரணத்திட்டத்திற்கு சிம்பாப்வே தடையாகவுள்ளது குற்றஞ்சாட்டுகிறது ஐக்கிய நாடுகள் அமைப்பு

(கராரே)

சிம்பாப்வே அரசாங்கம் அந்த நாட்டில் நிவாரண திட்டங்களுக்குத் தடையாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது.

சிம்பாப்வேயில் சேரி வீடுகள் அகற்றப்பட் டதால் வீடுகளை யிழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் திட்டத்திற்கு அந்நாடு தடை ஏற்படுத்துவதாக ஐக்கிய நாடுகளின் அவசர மனிதாபிமான நிவாரண் இணைப்பாளர் கூறியுள்ளார்.

சனாதிபதியின் சேரிவீடுகளை அப்புறப்படுத்தும் திட்டத்தினால் மூன்று இலட்சம் மக்கள் குடியிருப்புக்களை இழந்துள்ளனர்.

இவர்களுக்கு உதவும் பொருட்டு இம் மாதத்தின் முற்பகுதியில் இருந்து சனாதிபதியு டன் ஐக்கிய நாடுகளின் நிவாரண நிறு வனங்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. எனினும் இவ்விடயத்தில் சிம்பாப்வே அரசாங்கத்துடன் இணக்கப்பாடு காண முடியாதுள்ளதாகக் கவலைதெரிவித்துள்ளார். மக்கள் அடையும் துன்பங்களினால், தான் குழப்பமடைவதாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

# தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்ததன் ஆதாரங்கள் இந்த மண்ணிலே புதையுண்டுள்ளன

### பண்டார வன்னியன் நினைவு நிகழ்வில் எழிலன்



***தமிழர்களின் பூர்வீகம் இந்த மண்ணிலே புதையுண்டு உள்ளது என திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். முல்லைத்தீவு கற்சிலைமடுவில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற பண்டாரவன்னிய மன்னனின் 202ஆவது ஆண்டு நினைவு நாளில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.***

202ஆண்டுகளின் நிறைவில் பண்டாரவன்னியனை நினைவு கூர்ந்துள்ளோம். இக்காலப் பகுதியில் பல மாற்றங்கள் நடந்து முடிந்திருந்தாலும் மாவீரன் என்ற அடிப்படையில் உன்னதமான மனிதனை நினைவு கொள்ளவேண்டிய தேவையுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்த மண்ணிலே பூர்வீகமாக யார் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. அண்மையில் கூட சிறிலங்காவின் அமைச்சரொருவர் பேசும்போது தமிழர்கள் வந்தேறுகுடிகள் எனப் பேசியிருக்கிறார். துறவிகளாகவிருந்து அரசியல்வாதிகளாக மாறிய புத்த பிக்கு ஒருவர் பேசும்போது தமிழர்கள் வந்தேறு குடிகள் என பேசியிருக்கிறார்.

இப்படிப் பலர் பேசிக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் தமிழர்கள் பூர்வீகமாக இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்லுவதற்கு சில ஆதாரங்கள் மட்டும்தான் எம்மிடம் உள்ளன.

அந்த வகையிலே பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரமாக மன்னர்களின் ஆட்சியைக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்திலே சங்கிலியன், வன்னியிலே பண்டார வன்னியன், எல்லாளன் என்ற வரலாறுகளோடு எமது பூர்வீக வரலாறு இந்த மண்ணிலே புதைந்திருக்கிறது. இவ்வாதாரங்களை வெளியிலே சொல்லமுடியாத நிலைமையிலே சரியான ஆதாரங்கள் இல்லாதுள்ளோம்.

பண்டாரவன்னியனை நினைவு கூருகிறோம் ஆனால் பண்டாரவன்னியன் போர்கள் மூலம் ஈட்டிய வெற்றிகளை வெளியிலே சொல்வதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாமல் உள்ளோம். கற்சிலைமடுவிலே பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என்ற கல்லினை வைத்துக்கொண்டு பண்டாரவன்னியன் என்ற மன்னன் வாழ்ந்தான் என்ற செய்தியைச் சொல்லமுடிகிறது. வேறு எந்த ஆதாரங்களும் இல்லாமல்தான் எமது வரலாறு நகர்ந்து கொண்டிருக்கிறது.

இருப்பினும் பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் அமைந்துள்ள கோட்டையை அழித்தான் என்ற வெற்றி நாளை விழாவாக நாம் கொண்டாடுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது எனவும் தெரிவித்தார்.

# தனியாக வந்த பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு!

### –உந்துருளியில் வந்தவர் கைவரிசை

(கண்டாவளை)

கண்டாவளை பெரியகுளம் பகுதி வீதியால் ஈருருளியில் சென்ற பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை உந்துருளியில் வந்த இளைஞன் அறுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார்.

புளியம்பொக்கணை- வட்டக்கச்சி வீதியில் பெரியகுளம் பகுதியில் கடந்த புதன் கிழமை மாலை 5.00 மணியளவில் இது இடம்பெற்றுள்ளது. பெரியகுளத்தைச் சேர்ந்த திருமதி அருந்தவராணி புலேந்திரன் என்ற பெண்ணிடமே தங்கச்சங்கிலி அறுக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி மேற்படி பெண் தெரிவிக்கையில்; தான் தர்மபுரம் சென்று வீடு திரும்பி வந்த போது தங்கச்சங்கிலி அறுத்த இளைஞர் புளியம்பொக்கணைச் சந்தியில் நின்றதைக்கண்டதாகவும் தான் அரைக்கிலோமீற்றர் தூரம் வரை செல்ல மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் பின்னால் உந்துருளியில் வந்து சங்கிலியை அறுத்துக்கொண்டு திரும்பவும் புதுக்குடியிருப்பு வீதியால் தப்பி ஓடிவிட்டதாகவும் கூறினார்.

நான்கு பவுண் எடையுள்ள தங்கச்சங்கிலி பறிகொடுத்ததாக கவலை தெரிவித்துள்ளார். மேலும் அப்பெண் தெரிவிக்கையில்; தான் காலை10.00 மணியளவில் வட்டக்கச்சி சென்றபோது பழைய வட்டக்கச்சிப்பகுதியில் தன்னை மறித்து இந்த வீதி எங்கு போகிறது என இந்த இளைஞன் கேட்டதாகக் கூறினார். பார்வைக்கு அந்த இளைஞன் மிகவும் நாகரிகமான உடுப்புடன் காணப்பட்டதாகக் கூறினார். (14)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு கடற்றொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு மீண்டும் தொழிலுக்குச்செல்வோம் என்ற அடிப்படையில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் நிதியுதவியில் ஒருதொகுதி மீன்பிடி உபகரணம் வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

கியூடெக் கரித்தாஸ் நிறுவனங்கள் முதற்கட்டமாகவும் ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது. இரண்டாம் கட்டமாகவே இந்தப் பொருட்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

### மின்சாரம் தடைப்படல்

மின்பிறப்பாக்கியில் பராமரிப்பு/ திருத்தவேலைகள் நடைபெறவுள்ளதால் கிளிநொச்சிப் பகுதியில் இன்று அதிகாலை 4.30 மணி தொடக்கம் நண்பகல் 11.00 மணிவரை மின்சாரம் தடைப்படும் என மின்சாரசபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றனர்.

# கிளி. தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாடு; தயார்படுத்தும் பணிகள் தொடர்கின்றன

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டினையொட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமம் கிராமமாக மக்கள் தரிசனங்கள் மேற்கொள்ளப் பெற்று வருவதுடன் தமிழ் தேசிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

நேற்று முன்தினம் அரச ஊழியர்கள் முதல் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தனியார் வாகன உரிமையாளர் சங்கத்தினர், அழகக சங்கத்தினர் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கியதனை நேரில் காணக்கூடியதாகவிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர்கள் குமரபுரம், பரந்தன் கிராமத்திலும் விவசாயத்திணைக்கள ஊழியர்கள் அம்பாள்குளம், சாந்தபுரம் கிராமத்திலும், கரைச்சி பிரதேச சபை ஊழியர்கள் திருநகர் கிராமத்திலும். பாரவூர்தி சங்கம் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இணைந்து இரத்தினபுரம் கிராமத்திலும். முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் திருவையாறு கிராமத்திலும். அழகக சங்க உறுப்பினர்கள் உதயநகர் கிராமத்திலும் வீடு வீடாகச் சென்று தமிழ்தேசிய விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் மாநாட்டு ஏற்படுகளும் மாநாட்டின்போது அன்றைய தினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதாரம், குடிநீர், தரிப்பிட வசதிகள் குறித்த நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# சுயதொழில் வாய்ப்புக்கு உதவி

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களையும் அவர்களுக்கான பயிற்சிநெறிகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அவ்வப்போது வழங்கிவருகின்றது.

அந்தவகையில் கடந்த செவ்வாயன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட குண்டுமடு, களப்புக்கட்டு, செங்காமம், உன்னிச்சேனை போன்ற பகுதிகளில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய ஒரு தொகுதி மக்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கான பயிற்சிநெறிகளும் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் 42 ஆவது தொகுதி மக்களுக்கான பயிற்சிநெறி இதுவாகும்.

# வவுனியாவில் இடம்பெறும் கொலைகள்; பாதுகாப்பு தரப்பினர் அசமந்தம்!

### நீதிபதி எம்.இளஞ்செழியன் விசனம்

வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற 21 கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட விசாரணைகள் குறித்து தாம் திருப்தி கொள்ளவில்லை என வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இந்த கொலைகளுடன் தொடர்பு கொண்டவர்கள் கைது செய்யப்படாத நிலையுடன், சில கொலைகள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்கான வாய்ப்பை பெற்றுள்ளனர். வவுனியாவில் புளொட் அமைப்பைச் சேர்ந்த ராஜரத்தினம் ஸ்ரீகாந்தா என்பவரின் மரணவிசாரணையை மேற்கொண்ட பொழுதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார். (32)

### டிப்ளோமா வகுப்பு ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவகத்தால் முல்லைத்தீவு நிலையத்தில் நடத்தப்படும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா வகுப்பு 2005,2006 ஆம் ஆண்டுப் பிரிவுக்குரியது இன்று ஞாயிறு மு.ப. 8.30 மணிக்கு மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளர் க. சரவணபவன் அறியத்தருகின்றார்.

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பித்து நேர்முகத்தேர்வுக்குத் தோற்றிய அனைவரையும் தவறாது இன்றைய தினம் சமுகமளிக்குமாறு மேலும் அவர் கேட்டுக்கொள்கின்றார். (08)



சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை பெண்களுக்கான பன்ன வேலை பயிற்சிநெறி ஆரம்பவிழாவில் நிதி வழங்கிய வேள்ட்விசன் நிறுவன முல்லை. மாவட்ட இணைப்பாளர் ஐங்கரன் மங்கல விளக்கினை ஏற்றுகின்றார்.

(படம்:- சகிலா)

# கரைச்சி காணி அலுவலகத்தில் வாரம் இருநாள் மக்கள் தொடர்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசமக்களின் நலன் கருதி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தில் மக்கள் தொடர்புகள் வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலர் செ. ஸ்ரீரங்கநாதனுடன் தொடர்பு கொண்டபொழுது அவர் தெரிவிக்கையில்;

இதுவரை காலமும் காணி அலுவலகத்தில் வைத்து மக்களின் காணி சம்பந்தமான நடவடிக்கைகள் வாரத்தில் புதன்கிழமையில் மட்டுமே நடைபெற்று வந்ததெனவும், மக்கள் நலன் கருதி எதிர்வரும் வாரம் முதல் கிழமைகளில் இரண்டு நாட்கள் அதாவது திங்கள், புதன் ஆகிய இரு தினங்களிலும் கரைச்சிப்பிரதேச மக்களின் காணி சம்பந்தமான நடவடிக்கைகள் கரைச்சி பிரதேச காணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதெனவும் தெரிவித்துள்ளார். (சோ)


# சேமமடுப் பிரதேச முன்பள்ளிகளின் கலைநிகழ்வும், கண்காட்சியும்

வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் பாலமோட்டை சேமமடுப் பிரதேசங்களின் பதினாறு முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும் இராமனூரில் அமைந்துள்ள தெய்வம் முன்பள்ளியில் அண்மையில் வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சி.அரிகரன் தலைமையில் ஆரம்பமானது. மங்கள விளக்கேற்றலை தொடர்ந்து தேசியக் கொடியினை புளியங்குள பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பவாணன் ஏற்றினார். வரவேற்புரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர், வவுனியா அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் ஆகியோர் சிறப்புரை வழங்கியதோடு முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

# நல்லூர் வருடாந்த உற்சவத்தில் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி

(நல்லூர்)

**நல்லூர் வருடாந்த உற்சவத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் புகைப்படக் கண்காட்சிப் பிரிவினரால் கடந்த கால துன்ப, துயரங்களை வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சியொன்று கடந்த வியாழக்கிழமை இரவு முதல் இடம் பெற்று வருகின்றது**





இப் புகைப்படக் கண்காட்சி கடந்த காலத்தில் இடம் பெற்ற பல நிகழ்வுகளை வெளிப்படுத்துவதுடன், அழிவுகள், இழப்புக்கள், பயிற்சிகள், ஆயுதங்கள், பிரிவுகள், சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள், அவலங்கள் எனப் பலவிடயங்களையும் தொட்டு நிற்கின்றன. இக் கண்காட்சி உண்மையில் பார்ப்பவர்களுடைய மனதைத் தொடுவதாகவும், அவர்களைக் கண் கலங்கச் செய்வதாகவும் விளங்குகின்றமை சிறப்பாகும். இங்கு நூற்றுக்கு மேற்பட்ட புகைப் படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதனைப் பார்வையிடுவதில் அதிக எண்ணிக்கையான பொது மக்களும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள தாயகத்தைச் சேர்ந்தவர்களும் அக்கறை காட்டி வருகின்றார்கள். (41)

# எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை புனரமைக்கப்பட்டும் படையினர் அகலவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுதுமட்டுவாள்- அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை புனரமைக்கப்பட்டுவிட்ட நிலையிலும் அப்பாடசாலையில் நிலைகொண்டுள்ள இராணுவம் அங்கிருந்து முழுமையாக வெளியேறாமையால் அப்பாடசாலையை இயங்கச் செய்யமுடியாத நிலைமை தோன்றியுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாடசாலை இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்டு சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு அதனை இயங்கவைக்க கல்வித் திணைககளத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் இப்பாடசாலை இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயத்துக்கு நெருக்கமாக இருக்கின்றமையைக் காரணம் காட்டி அங்கிருந்து முற்று முழுதாக வெளியேற இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளதுடன் அங்கிருக்கும் வகுப்பறைத் தொகுதி ஒன்றில் அவர்கள் தொடர்ந்தும் தங்கியிருக்கின்றனர். (33)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கல்

யாழ். மாவட்டத்திலுள்ள வடமராட்சி வலயத்தில் அமைந்துள்ள தம்பசிட்டி எனுமிடத்திலுள்ள சர்வோதயம் முன்பள்ளியில் கடந்த வியாழனன்று காலை 10.00 மணியளவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நான்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்ட இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன், யாழ.மாவட்ட முன்பள்ளி திட்ட இணைப்பாளர் பொ.அதீசன், வடமராட்சி வலய இணைப்பாளர்கள், பிரதேச இணைப்பாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மணற்காட்டில் கடற்படையால் கைதான மீனவர்களை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட வடமராட்சி மணற்காடு மீனவர்கள் இருவரையும் விடுதலை செய்ய திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது. மைக்கல் பிள்ளை வின்ரனிராஸ், ராசையா ரூபன் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்றொழிலுக்குச் சென்ற போது சிறிலங்காக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதனை எதிர்த்து மணற்காடு படை முகாமை அப்பகுதி மக்கள் கடந்த புதன்கிழமை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். மக்கள் போராட்டத்தையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இப்பிரச்சினையில் தலையிட்டது. சட்ட விரோதமாக கைது செய்யப்பட்ட இரண்டு அப்பாவி மீனவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று உறுதி மொழியும் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வியாழன் காலை திருகோணமலை துறைமுக பொலிசாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். மீனவர்கள் இருவரையும் விடுதலை செய்ய நீதிபதி எஸ். ராமகமலன் உத்தரவிட்டார். இருப்பினும் வடமராட்சியிலிருந்து அவர்கள் உறவினர் வந்து அழைத்துச் செல்ல ஏதுவாக செப்ரெம்பர் முதலாம் திகதி வரை மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் நீதிபதி தனது உத்தரவில் கூறியிருந்தார். இது தொடர்பாக வடமராட்சி மீனவர் சங்கத் தலைவர் சூரியகுமாருக்கு திருமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் அனுப்பியுள்ளனர். உரிய ஆவணங்களுடன் திருமலை சென்று இரு மீனவர்களையும் அழைத்து வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (32)

# பலாலி விமானத்தள புனரமைப்பிற்கு சுண்ணக் கற்பாறைகள் அகழ்வு!

## -பாரிய சூழல் பிரச்சினைகள் தலைதூக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவிட்டபுரம் பகுதியில் இருந்து சிறிலங்கா படையினரால் சுண்ணக்கற்பாறைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இச்சுண்ணக்கற்பாறைகள் தனியார் காணிகளில் இருந்தும், விவசாய நிலப்பரப்புகளில் இருந்தும் பெருந்தொகையாக அகழப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படும் சுண்ணக்கற்கள் கனரக இராணுவ வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டு பலாலி விமானப்படைத்தளம் மற்றும் விமான ஓடுபாதை நிர்மாணப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினரது இத்தகைய நடவடிக்கைகள் மேற்படிபகுதியில் பாரிய சூழல் தாக்கங்களை உருவாக்கி வருகின்ற போதும் இந்த சுண்ணக்கற்பாறை அகழ்வுகள் நடைபெறும் மாவிட்டபுரம் பகுதி வலிகாமம் வடக்கு இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதனால் அங்கு சென்று இந்த கல் அகழ்வை தடுத்து நிறுத்த முடியாத நிலைமை உள்ளதாக சுற்றுச் சூழல் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (33)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் வடமராட்சி கடற்பரப்பில் அதிகரிப்பு!

## -சிறிலங்கா கடற்படையினர் மௌனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சிக்கடற்பரப்பில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ள வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் இந்திய மீனவர்கள் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் இத்தகைய அத்துமீறல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சிறிலங்கா கடற்படையினர் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்காதிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி புரியும் அராஜகங்களால் வடமராட்சி மீனவர்கள் தொழில் மற்றும் உடமை ரீதியாக பலவித பாதிப்புக்களை எதிர் கொள்கின்றனர். மட்டுமன்றி இலங்கைக்கடற்பிராந்திய இறைமையை மீறி இலங்கை மீனவர்களுக்கு உரித்தான கடல் வளங்களை இந்திய மீனவர்கள் சுரண்டிச்செல்கின்றனர்.

எனினும் இது குறித்து எதுவித கவனமும் எடுக்காது வெறுமனவே தமிழ் மீனவர்களது சுதந்திரமான தொழில் நடவடிக்கைகளை பாதிப்படையச்செய்வதை மட்டுமே நோக்கமாகக்கொண்டு சிறிலங்கா கடற்படை செயற்பட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ள வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் இது குறித்து விசனம் தெரிவித்துள்ளன. (33)

# உல்லாசப் பயணிகள் 13 ஆயிரம்பேர் தலைமறைவு!

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து உல்லாசப் பிரயாணிகளாக சிறிலங்காவுக்குவந்த 13 ஆயிரம்பேர் மீண்டும் தமது நாடுகளுக்கு திரும்பிச்செல்லாமல் சிறிலங்காவில் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனரென சிறிலங்காவின் மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களைக் கைதுசெய்ய பாதுகாப்பு அமைச்சு தேடுதல்களை நடத்துகின்றது.

# நீதிமன்றத் தீர்ப்பு சனநாயகத்தை இல்லாதொழிக்கும் சனாதிபதியின் முயற்சிக்கு கிடைத்த தோல்வி

## –தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளு. உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

சனநாயக வழியை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்காக சனாதிபதி எடுத்த முயற்சிக்குக் கிடைத்த ஒரு தோல்வியே உயர் நீதிமன்றத்தின் அறிவித்தல். அதேவேளை சனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்றே இதைக் கூற வேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில ;சனாதிபதித்தேர்தல் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்றே கூற வேண்டும். காரணம் என்னவென்றால் அரசியல் அமைப்பின் படி சனாதிபதியினுடைய காலப்பகுதி ஆறாண்டு காலமாகும் கடந்த தேர்தலில் அவர் எப்பொழுது தோதலில் வெற்றி பெற்றாரோ அந்தத் தினத்தில் இருந்து ஆறாண்டு காலத்திற்குத்தான் நிச்சயிக்கப்பட வேண்டும். எனவே இந்த சனநாயக வழியை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்காக சனாதிபதி எடுத்த முயற்சி தோல்விஅடைந்த அதே நேரம் சனநாயகம் வெற்றி பெற்றுள்ளதென்றே கூறவேண்டும் என்றார் அவர்.

# அமைதிப் பேச்சுக்களுக்கு உதவுக இந்தியாவிடம் அநுரா கோரிக்கை

(கொழும்பு)

இந்தியா சென்றுள்ள சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுராபண்டாரநாயக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கை நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்துப் பேசினார். சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமைதிப்பேச்சுகளுக்கு உதவுமாறு இந்திய அமைச்சர் நட்வர்சிங்கிடம் அநுராபண்டாரநாயக்க கோரிக்கை விடுத்ததாக இந்திய அமைச்சக அதிகாரி ஒருவர் கூறினார். சிறிலங்கா- இந்தியா உறவுகள் குறித்து பேச்சு நடாத்தவும் இலங்கையில் முடங்கிக் கிடக்கும் அமைதிப்பேச்சுக்கள் குறித்து விவாதிக்கவும் இந்திய அரசு விடுத்திருந்த அழைப்பையடுத்து இருநாள் பயணமாக அநுரா பண்டாரநாயக்க டில்லி சென்றார்.நேற்று முன் தினம் மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கையும் அவர் சந்தித்து உரையாடினார்.

# உயர் நீதிமன்ற வளாகம் முன் ஐ.தே.க வினர் மகிழ்ச்சி ஆரவாரம்

(கொழும்பு)


சனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதை அடுத்து நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர்.

இதன் போது பெருமளவு பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்த மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற ரணசிங்க பிறேமதாசாவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை சனாதிபதித் தேர்தல் இந்த வருடமே நடத்தப்பட வேண்டுமென்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்கும் வைபவம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பலர் கலந்து கொண்டனர்.

மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்காக தேர்தல் ஆணையாளர் எடுத்த முயற்சியைக் கௌரவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு கூறியுள்ளார்.

**சிறிலங்காவின** கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா விக்கிரமகுமார சந்தகிரி வரும் புதன்கிழமையுடன் ஓய்வு பெறுகிறார். வழமைபோலவே அடுத்த கடற்படைத் தளபதி யார்? என்பதில் இருவரின் பெயர்கள் இப்பொழுது அடிபடத்



இது ஒரு முறையற்ற செயல் என்பதோடு கூட ஊழல் உறவினருக்கு தலைகாட்டுவது போன்றதாகுமென்று வி.ஜே.பியின் தவைலர் டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இதனிடையே தாம் வருமான வரி வழக்கு ஒன்றில் வாதாட இருப்பதுபற்றி தனது கணவருக்கு தெரியாது என்று திருமதி நளினை சிதம்பரம் கூறியுள்ளார்.

## காங்கிரசின் தேசிய மாநாடு வரும் ஒக்ரோபரில்

காங்கிரஸ் கட்சியின் மூன்று நாள் அகில இந்திய மாநாடு ஒக்ரோபர் மாதம் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதற்கு முன்னதாக காங்கிரஸ் முதலமைச்சர்கள் மாநாடு அடுத்த மாதம் நடைபெறவுள்ளதென்று காரியக் கமிட்டிக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் அம்பிகாசோனி தெரிவித்தார்.

## ஜப்பானிய காய்ச்சலினால் 216 பேர் இதுவரையில் பலி

உத்தரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் ஜப்பானிய முளைக்காய்ச்சல் நோயினால் இதுவரை 211 பேர் உயிரிழந்துள்ளனர். பன்றிகளிடமிருந்து இந்த வைரஸ் நோய் பரவுகின்றது. பின்னர் நுளம்புகளின் மூலம் மனிதர்களில் இக்கிருமி புகுந்து விடுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது.

## தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு காஷ்மீரின் அனத்திராக் மாவட்டத்தில்இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கு மிடையே ஏற்பட்ட மோதல் ஒன்றில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாத் தெரிவிக்கப்படுகிறது.

## சேது சமுத்திரத்திட்டம் தொடர்கிறது


தமிழகத்தின் கோடிக்கரை அருகே 2000கோடி இந்திய ரூபா செலவி லான சேது சமுத்திரத்திட்டப் பணிகளில் சுமார் ஒன்பது இலட்சம் கன மீற்றர் அளவுக்கு தோண்டும்பணி நடைபெற்றுள்ளது.

இதில் பாக்கு நீரிணைப் பகுதியில் கடந்த மாதம் இரண்டாம்திகதி தொடங்கிய பணிகள் தற்போது தீவிர மடைந்துள்ளன. மற்றுமுள்ள ஒரு கோடியே முப்பத்து ஆறு இலட்சம் கனமீற்றரில் இது வரை சுமார் ஒன் பது இலட்சம் கன மீற்றர் அள வுக்கு கடலில் மண் தோண்டப்பட் டுள்ளது. கடல் தளத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் களிமண், மணல் போன்றவற்றை அதற்கென்று தேர்வு செய்யப்பட்டுள்ள ஆழ்கடல் பகுதி யில் இந்திய அகழ்வுப் பணிக்கழகம் கொட்டவுள்ளது.


13 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு 11 - 03 - 1972

வீரச்சாவு 28 - 08 - 1992



லெப்டினன்ட் மன்றவாணன்

(கதிர்காமவேலன் சிறிகாந்தன்)

(மீசாலை)

மண் மீட்பு பணிக்காய் தானைத்தலைவனின்
அணியில் சேர்ந்து கொண்டாயோ – மன்றவாணனாய்
உன் புன்னகை முகம் கண்டு பதின்மூன்று
வருடங்கள் மறைந்தோடிப்போயினவே–சிறிகாந்தா
மண்மீட்புக்காய் வித்தாகிய உங்கள்
ஆத்மா சாந்தி பெற கண்ணீரோடு
வேண்டி நிற்கிறோம்.


த.மு.
இல–04
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி. (6672)

என்றும் உன் நினைவுடன்
அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.



13ஆம் ஆண்டு நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

தாயின் மடியில் 1972 ❖ 03 ❖ 11



மண்ணின் மடியில் 1992 ❖ 08 ❖ 28

லெப்டினன்ட் மன்றவாணன்

(கதிர்காமவேலன் சிறிகாந்தன்)

மீசாலை வடக்கு, வேம்பிராய், கொடிகாமம்

தலைவன் வழியினிலே தாயகம் மீட்க
வீறு கொண்ட புலி வீரனாகப் புறப்பட்டாயே காந்தனே
களம் பல கண்டு சாதனை படைத்து சந்தன மேனியாய்
உறங்கினாய் கட்டைக்காட்டு மண்ணில்

இந்நாளில் மண்மீட்பிற்காய் வீரகாவியம் ஆகிய அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

ஜெயந்திநகர்
கிளிநொச்சி (சி.12592)

கதிர்காமவேலன் குடும்பம்
கலாமோகன் குடும்பம்.

## இலங்கைத் தேசிய மெய்வன்மைப் போட்டி
## வட.கிழக்கு மாகாணத்திற்கு 3 ஆம் இடம்

அகில இலங்கை ரீதியான தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் மேல் மாகாணஅணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. வடக்கு கிழக்கு மாகாணம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

மூன்று நாட்களாக மாத்தளையில் நடைபெற்ற மேற்படி போட்டி நேற்று நிறைவு பெற்றது.

இம்முறை இரண்டு சாதனைகள் நிறைவேற்றப்பட்டன. ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வடமேல்மாகாணத்தைச் சேர்ந்த ஜெகான் பெரேரா 53.8 மீற்றர் தூரத்துக்கு தட்டெறிந்து சாதனை படைத்தார்.

பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த மதுவந்தி 1.71 மீற்றர் உயரம் தாண்டி சாதனைபடைத்தார்.

இம்முறை மெய்வன்மை போட்டிகளில் சிறந்த வீரராக மேல் மாகாணத்தைச் சேர்ந்த ஜெகத்சிறி அஜித் தெரிவானார். சிறந்த வீராங்கனையாக அதே மாவட்டத்தைச் சேர்ந்த சசிராங் கனி தெரிவானார்.

## மென்பந்து, கரப்பந்துப் போட்டி விண்ணப்பத் திகதி நீடிப்பு

கிளிநொச்சி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்து போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனவே, பதிவுகளை மேற்கொள்ள தவறிய கழகங்கள் தமது பதிவுகளை காலதாமதமின்றி முன்னர் அறிவிக்கப்பட்ட இடங்களில் விண்ணப்பங்களை சேர்ப்பிக்குமாறு நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத் தினர் கேட்டுள்ளனர்.



## இறுதிப் போட்டியில் சானியா

நியூயோர்க்கில் நடைபெறும் ரூபாரஸ் கிளாசிக் ரெனிஸ் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் சானியா மிர்சா தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் அலக்சாகினாட்சை 6-4,6-4 என்ற செட்கணக்கில் அவர் எளிதாக தோற்கடித்தார். இந்த வெற்றி மூலம் மேலும் ஒரு மகளிர் டென்னிஸ் பட்டத்தைக் கைப்பற்றும் வாய்ப்பை சானியா நெருங்கியுள்ளார்.





சம்பிய[illegible] லக்கிஸ்ரார் அணி வெற்றிக் கிண்ணங்களுடன்


இரண்டாம் இடத்தைப் பெற்ற ஜெகமீட்பர் அணி.

## பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்தப் கால்பந்து போட்டி
## லக்கிஸ்ரார் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் நடாத்திய அமரர் பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்த கால்பந்து வெற்றிக்கிண்ணத்தை வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி சுவீகரித்துக் கொண்டது.

கடந்த மூன்று நாட்களாக உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டிகள் நேற்று நிறைவு பெற்றன.

25 அணிகள் கலந்து கொண்ட விலகல்முறையிலான கால்பந்து போட்டியில் அரையிறுதிப்போட்டியில் திருநகர் அணியை 1-0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்த வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி இறுதிப் போட்டிக்கும், ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியை 4-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி இறுதிப் போட்டிக்கும் தெரிவாகின.

நேற்று மாலை நடைபெற்ற பரபரப்பான இறுதியாட்டத்தில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரிக்க இரு அணிகளும் கடுமையாகப் போராடிய போதும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளாலும் வெற்றிக்குரிய கோலை பெறமுடியவில்லை. ஒரு கட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி கோல் ஒன்றை போட்ட போதும் அது தவறுதலாக பெறப்பட்ட கோலாக அமைய இறுதியில் பெனால்டிக் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் லக்கிஸ்ரார் அணி 5-4 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்று பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.


இப்போட்டியின் சிறப்பாட்டக் காரராக ஜெகமீட்பர் அணி வீரர் விக்டர் தெரிவானார்.

இதேவேளை கப்டன் கரிகாலன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் நியூஸ்ரார், இளந்தென்றல் அணிகள் இணை சம்பியன்களாக அறிவிக்கப்பட்டன.


எட்டு அணிகள் கலந்து கொண்ட மேற்படி போட்டியில் இறுதிப்போட்டிக்கு நியூஸ்ரார் / இளந்தென்றல்அணிகள் தெரிவாகின. இரு அணிகளும் இறுதிப்போட்டியில் ஒன்றை ஒன்று சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் மோதியதால் போட்டி நீண்ட நேரம் நீடித்தது. இதனால் வெளிச்சமின்மை காரணமாக மேலும்போட்டியை நடத்த முடியாமல் போக இரு அணிகளும் இணைச் சம்பியன்களாக அறிவிக்கப்பட்டன.

மேற்படி இறுதிப்போட்டி நிகழ்வை கரைச்சிப்பிரதேச செயலர், விளையாட்டுத்துறைசார்ந்த அலுவலர்கள் மற்றும் அமரர் பத்மேஸ்வரன் (சிவா) கப்டன் கரிகாலன் ஆகியோரின் பெற்றோர், உறவினர்கள் கைலாகு கொடுத்து ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.


கரப்பந்து இணைச் சம்பியன்


சிறப்பாட்ட வீரர் விக்டர்

## ஆஷஸ். நான்காவது டெஸ்ட் போட்டி
## இங்கிலாந்து அணி பலமான நிலையில்



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடரில் நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி தடுமாற்றத்தை சந்தித்துள்ளது.

நொட்டிங்காம் மைதானத்தில் நடைபெறும் மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இனிங்சில் 477 ஓட்டங்களை குவித்தது.

பிளின்டொப் 102 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் ஷேன் வோர்ன், ஷோன்டைட் தலா நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு முதலாவது இனிங்சை ஆடிய அவுஸ்திரேலியா 218 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



இந்த நிலையில் அந்த அணி பல-வோன் நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடும்படி பணிக்கப்பட்டது. மூன்றாம் நாளான நேற்று அவுஸ்திரேலியா நான்கு விக்கெட்டை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## கட்டைக்காட்டில் நடைபெற்ற இளையோர் விளையாட்டு விழா

இளையோர் செயற்பாட்டு நிறுவனம் கடந்த 23ஆம் திகதி இளையோருக்கான விளையாட்டு நிகழ்வு ஒன்றை கட்டைக்காட்டில் நடாத்தியது. இளையோர் விளையாட்டுக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பொதுச்சுடரினை சிறுவர் பாதுகாப்பு நிதிய பங்காளருக்கான திட்ட அலுவலர் செல்வி. த. மேரி லெம்பேட், ஊரக மேம்பாட்டுத் தலைவர் லிங்கேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை மாவீரன் கப்டன் அன்பானந்தனின் தந்தை மு.சபாரட்ணம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து இளையோர் செயற்பாட்டுக் கொடியினை இளையோர் செயற்பாட்டு நிறுவன வடமராட்சி இணைப்பாளர் மதி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மைதான நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் ஓட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன.




## அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியை உலக 11 பேர் அணி வெற்றிபெறும்

–முரளி,சங்கக்கார




வரும் ஒக்டோபர் மாதம் மெல்போர்னில் நடைபெறவுள்ள உலக11 பேர் கிரிக்கெட் அணிக்கு எதிராக விளையாடவிருக்கும் அவுஸ்திரேலிய அணியின் விபரங்கள் அறிவிக்கப்பட்டு இரண்டு நாட்களில் அவுஸ்திரேலிய அணியை உலக அணி வென்று விடும் என சிறிலங்காவின் நட்சத்திர வீரர்களான முத்தையா முரளிதரனதும், குமார் சங்கக்காரவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான இரு அணியிலும் இடம்பிடித்துள்ள முரளிதரன் தொடர்ந்து கூறும் போது; அவுஸ்திரேலிய அணியில் இடம் பிடித்திருக்கும் வீரர்களை நோக்கும் போது வெற்றி நிச்சயமாக உலக 11 பேர் அணிக்கே கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை சங்கக்கார தெரிவித்திருப்பதாவது; உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்ற இங்கிலாந்து தற்போது தமது பலவீனத்தை இனம் கண்டு திருந்தி பலமான அணியாக விளங்குவதாகத் தெரிவித்தார். இங்கிலாந்து வீரர்கள் சுய நம்பிக்கை வைத்திருப்பதால் ஒருவர் மோசமாக ஆடினாலும் மற்றவர் பொறுப்புடன் ஆடி வெற்றி பெற்றுவிடுவார் எனவும் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.


மைதானத்தில் எதிரணி வீரர்களை குறிவைத்துப் பந்து வீசும் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களான மெக்ராத், கிளெஸ்பி ஓய்வறையில் இருந்து யாரைக் குறிவைக்கின்றார்கள்.

## சிந்தனைக்கு



நாம் அரசியல்வாதிகளல்லர்:
நாம் புரட்சி வாதிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 28.08.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## எண்ணப்படும் நாட்கள்!

சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி நாட்கள் கழித்தல் முறையில் அதாவது மேலிருந்து கீழாக எண்ணப்படத் தொடங்கியாகிவிட்டது. டிசம்பர் 22இல் அவர் பதவிவிலக வேண்டும் என்பது உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ளது. ஆகையினால் இனிவரும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும்அவரது எஞ்சியுள்ள ஆட்சிக்காலத்தில் கழிக்கப்படும் நாட்களாகவும் நேரமாகவுமே இருக்க முடியும்.

இதேவேளை இவ்வாண்டு சனாதிபதித்தேர்தல் நடைபெற்று சனாதிபதியாக புதியவர் நவம்பர் மாதத்தில் தெரிவுசெய்யப்படினும், சனாதிபதி சந்திரிகா டிசம்பர் 22ஆம் திகதிக்கு முன்னர் பதவி விலகுவார் என எதிர்பார்ப்பதற்கில்லை. அதாவது பெருந் தன்மையுடன் நடந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அவர் தனது பதவிக்காலத்தை 2006 ஆம் ஆண்டு வரையில் நீடிப்பதற்காக அரும்பாடுபட்டவர்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு தனது பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது என்பது தெரியாத தொன்றல்ல. அதாவது சனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெற்று பதவிப்பிரமாணம் செய்தால் ஆறு ஆண்டுகளில் அப்பதவிக்காலம் முடிவடைகின்றது என்பது அரசியலில் ஆர்வம் கொண்ட பாமர மக்களுக்கும் கூடத் தெரிந்த தொன்றாகும்.

ஆனால் தனது பதவிக்காலத்தை ஓராண்டு நீடிப்பதற்காக தானும் பொய்பேசி தன்னைச் சூழவிருந்த மற்றவர்களையும் மனச்சாட்சிக்கு விரோதமாகப்பொய் பேசத்தூண்டியவர் சனாதிபதி சந்திரிகா ஆவார். ஆகையினால் உயர் நீதிமன்றம் தேர்தல் குறித்து வழங்கிய தீர்ப்பு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நிச்சயமாக கவலை அளிப்பதாக இருந்திருக்கும் எனத் துணிந்து கூற முடியும். இதேவேளை இது அவருக்கு ஆச்சரியம் அளிப்பதாக இருந்திருக்க எந்தவிதத்திலும் வாய்ப்பில்லை.

மற்றொரு புறத்தில் இத்தேர்தல் குறித்த உயர்நீதிமன்றத்தீர்ப்பானது சனாதிபதிசந்திரிகாவின் அரசியல் எதிர்பார்க்கைகள், அபிலாசைகள் எதனையுமே நிறைவு செய்ய முடியாத அவல நிலையில் அவர் பதவிதுறக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளது. அதாவது எந்தவித மனத்திருப்தியுடனும் அவர் பதவிவிலகிச் செல்ல முடியாததொரு நிலையையே உருவாக்கியுள்ளது.

குறிப்பாக தனது அரசியல் எதிர்காலம், பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் எதிர்காலம், சுதந்திரக்கட்சியின் அரசியல் எதிர்காலம் எது குறித்துமே சனாதிபதி சந்திரிகா மனத்திருப்திப்பட்டுக்கொள்ளும் நிலையில் தற்பொழுது இல்லை. அதாவது அதிகாரமும்,பதவிகளும் அற்ற தனது எதிர்காலம்,பண்டார நாயக்கா குடும்பத்தின் வாரிசுகள் அற்ற சனாதிபதித்தேர்தல், ஜே.வி.பி.யுடன் ஒத்துப்போவதா? முரண்பட்டுப்போவதா? சுதந்திரக்கட்சியின் இருப்பிற்கு ஏற்றதென்ற தீர்மானம் எதுகுறித்துமே தீர்மானிக்க முடியாத நிலையிலேயே சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடைகின்றது.

இதேவேளை நீதிமன்றத் தீர்ப்பானது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும் என்று துணிந்து கூறலாம். நீதிமன்றத்தீர்ப்பை கேட்டதும் ஐ.தே.க ஆதரவாளர்கள் வெடிகொளுத்திக் கொண்டாடியமையும், ரணில்விக்கிரமசிங்கவிற்கு வரவேற்பு அளித்தமையையும் சுட்டிக்காட்டமுடியும்

வேறொருவிதத்தில் கூறுவதானால், இத்தேர்தல் குறித்த முடிவிற்காக ஐ.தே.க.பெரும் போராட்டங்களையே நடத்தியது எனலாம். இதில் மக்கள் சக்தி என்னும் பாதயாத்திரைப் போராட்டம், கையொப்ப வேட்டை என்பன குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. இதேவேளை பாராளுமன்றத் தேர்தலின்முன் சனாதிபதித் தேர்தலையே ஐ.தே.க விரும்பியதால் நீதிமன்றத்தீர்ப்பால் ஐ.தே.க.பெரும் மகிழ்ச்சி அடைந்திருத்தல் கூடும்.

இதேவேளை இத்தேர்தல் குறித்து இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியான ஜே.வி.பி.யும் மகிழ்ச்சிகொள்வதற்கு எதுவுமே இல்லை. ஏனெனில், சனாதிபதித் தேர்தல்குறித்து அது எடுக்கப்போகும் தீர்மானம் அதன் எதிர்காலத்தையே தீர்மானிப்பதாக இருக்கக் கூடும். ஆனால் அக்கட்சி எத்தீர்மானம் எடுப்பினும்- அதாவது சுதந்திரக் கட்சிவேட்பாளரை ஆதரிப்பாக எடுத்தாலும் சரி, தனித்துப்போட்டியிடுவதாக எடுத்தாலும் சரி அதன் எதிர்காலம் சவால் நிறைந்ததாகவே இருக்கும்.

இதேவேளை இத்தீர்ப்புக்குறித்து மகிழ்ச்சி அடையவோ கவலை கொள்ளவோ தமிழ்மக்களுக்கு எதுவுமே இல்லை. ஏனெனில், சனாதிபதித்தேர்தல் நடைபெற்று யார் ஆட்சிக்குவந்தாலும் சரி, எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, தமிழ் மக்களின் துன்பங்கள், துயரங்கள் நீக்கப்படுமா? அவர்களின் அரசியல் உரிமைகள், அதிகாரங்கள் வழங்கப்படுமா? என்பது கேள்விக்குரியதே.

அதாவது ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் பதவியைக் கைப்பற்றினால் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனக்கூறி விடுவதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை.கடந்த காலத்தில் அவரது அரசாங்கம் கூட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனிதாபிமானப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்கத்தயாராக இருந்ததில்லை. அதாவது சிரானின் முடக்கமும் பொதுக்கட்டமைப்பின் தோல்வியிலும் இருந்தே தென்னிலங்கை அரசியல் மாற்றங்களினால் தமிழ்மக்களுக்கு நன்மை எதுவும் ஏற்பட்டுவிட வாய்ப்பில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் சனாதிபதித்தேர்தல்வரின் நிகழப்போவது புதிய ஆட்சியாளர்கள் பேச்சு வார்த்தைகளுக்கெனக்கோரப்போகும் கால அவகாசம் மட்டுமே. அதாவது அவர்கள் தம்மை ஆட்சியில் நிலை நிறுத்திக் கொள்வதற்கான கால அவகாசமே.இதுவே கடந்த கால வரலாறும் ஆகும்.

# வடகிழக்கு, மலையக தமிழ், முஸ்லிம் கட்சிகள் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்த யோசனை?

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வடக்குகிழக்கு மலையக தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான யோசனை தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் முன்வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த யோசனை தொடர்பில் கருத்தை முன்வைக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயலர் எஸ். ஏ கந்தசாமி, இன்றைய காலத்தின் கட்டாயம் என்ற நிலையில் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது அவசியம்.என்றார் இந்த யோசனை தொடர்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கருத்துரைக்கையில்: இந்த விடயம் குறித்து தமது கட்சி தற்சமயம் ஆராய்ந்துகொண்டிருப்பதாகவும் விரைவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்

இந்த யோசனையானது வரவேற்கக்கூடியது எனத்தெரிவித்த மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறுகையில் இது ஒரு நல்ல யோசனையாகும்.எனினும் இந்த யோசனை முழுமைபெறவேண்டுமானால் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள அனைத்து தமிழ் கட்சிகள் மத்தியில் இணக்கம் ஏற்படவேண்டும் என குறிப்பிட்டார்.

தமது கட்சியின் உயர் பீடம் ஏற்கனவே இரண்டு விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசித்துள்ள நிலையில் தற்சமயம் முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் கருத்தை ஆராய முடியும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்த வரையில் எந்த ஒரு யோசனையையும் நிராகரிப்பதில்லை என தெரிவித்த அதன் தலைவர் ஆறுமுகன் தொண்ட மான்,தமது கட்சி எந்த யோசனையையும் நிராகரிக்காது என்ற போதிலும் இவ்வாறான பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் காரணமாக சாதிக்கப்போவது என்ன என்பது தொடர்பாக ஆராயவேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

தமது கட்சி இந்த யோசனை தொடர்பில் கொள்கை இணக்கத்தை கொண்டிருப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.குறித்த யோசனை தொடர்பாக தமது கட்சி ஆராயலாம் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உப தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். இது காலத்தின் கட்டாயம் எனவும் தெரிவித்துள்ளார் .(32)

# இலங்கை வரும் நோர்வே நாட்டவரை அவதானமாக இருக்க பணிப்பு

(ஒஸ்லோ)

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக பயணிக்கும் நோர்வே நாட்டினர் அவதானமாக நடந்துக் கொள்ள வேண்டும் என அந்த நாட்டு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.இது தொடர்பாக நோர்வேயின் வெளியுறவு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நோர்வே நாடு இலங்கையைப் பொறுத்தவரையில் மிகவும் அவதானமான சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கையில் இந்த நடவடிக்கைகளுக்கு எதிரான போக்கு தற்சமயம் காணப்படுகிறது.எனவே இலங்கைக்கு செல்லும் நோர்வே நாட்டினர் அவதானமாக நடந்துக்கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து நோர்வே நாட்டினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படும் அச்சம் காரணமாகவே இந்த எச்சரிக்கையை தாம் விடுப்பதாக நோர்வேயின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.(32)

# சு.க.வின் ஆயுட்காலத்தலைவராக சந்திரிகா நியமிக்கப்படவுள்ளார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுட்கால தலைவராக சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்படவுள்ளார். அடுத்த மாதம் நான்காம் திகதி கொழும்பு ரேஸ்கோர்ஸ் திடலில் நடைபெறவுள்ள சுதந்திரக்கட்சியின் 54 ஆம் ஆண்டு விழாவில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்படக் கூடும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சனாதிபதி பதவியிலிருந்து சந்திரிகா விலகும் நிலையில் அவரது பொதுவாழ்க்கையும் முடிவுக்கு வருகிறது. இந்நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விதிகள் சந்திரிகாவுக்காக மாற்றியமைக்கப்பட்டு அதிகாரத்துடன் கூடிய ஆயுட்கால தலைவராக நியமிக்கப்படவுள்ளார்

ஆனால் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கட்சியின் நிறை வேற்று இயக்குனர் சிசில் பண்டார செனிவிரத்ன ஊடகங்களில் கட்சி யின் சாசன திருத்தம் தொடர்பாக வெளியாகியிருக்கும் செய்திகள் ஐந்து சதவீதமானவைதான் என்றார்.

பிரதி அமைச்சர் சிறீபதி சூரியராச்சி, அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் கட்சியின் சாசன திருத்தப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் மாநாடானது அரச அதிகாரங்களை இழக்கப் போகிற சந்திரிகாவிற்குத் தொடர்ந்து கட்சி ஆதரவு அளிக்கும் என்பதை வெளிப்படுத்துகிற மாநாடா கவே இருக்கும் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

# மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க ஆவணம் தயாரிக்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

சிறிலங்காவின் தேசிய ரீதியான கொள்கைகள் தொடர்பில் பிரதமர் ராஜபக்ஷ இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டால் தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்கப் போவதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

தனியார் மயமாக்கல், கல்வி மறுசீரமைப்பு, சமாதான செயற்பாடுகள் மற்றும் ஆழிப்பேரலை நிவாரண சபை போன்ற முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் பிரதமருடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஜே.வி.பி விரும்புகின்றது. இது தொடர்பக ஆவணத்தைத் தயார் செய்து ராஜபக்ஷவுக்கு வழங்கி அதுபற்றி அவருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் ஜே.வி.பி யின் மத்திய குழு முடிவு செய்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நுகேகொடையில் அமைந்துள்ள ஜே.வி.பி தலைமையகத்தில் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்றது. அக் கூட்டத்தில் இது தொடர்பான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கான அதிகாரம் ஜே.வி.பி அரசியல் பீடத்திற்கு வழங்கப்பட்டது. ராஜபக்ஷவுடனான இணக்கத்திற்குரிய ஆவணத் தைத் தயாரிப்பதற்கென கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான குழு அமைக்கப்படடுள்ளது.

## சனாதிபதித்தேர்தலைச்...

ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்வதற்கு அதிக பங்களிப்புடன் செயற்படவேண்டும் என கூட்டத்தில் பங்கேற்றோர் கருத்துத் தெரிவித்தனர்.

அரசாங்கம் மக்களுக்காக என்னென்ன வேலைகளைச் செய்தாலும் தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பதால் அரசாங்கத்தின் புகழ் குறையக்கூடும். ஆகையால் தேர்தலை இந்த ஆண்டிலேயே நடத் துவது மகிந்த ராஜபக்ஷவின் வெற் றியை இலகுவாக்கும் என்பது அவர்களின் கருத்தாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களின் நிலைமைகுறித்து கட்சிக்கு தெரிவித்துவருகின்றனர்.

காலி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அரசாங்கத்திற்குச் சார்பான நிலையே உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

காலிமாவட்டத்தில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீளஅமைத்துக் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணம் என்றும் இதனை சீர் செய்வதற்கு அரசாங்கம்உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

## பேரினவாதத்தின்...

போதைய சமாதான காலம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு உட்பட்ட வகையிலும் தமிழ் மக்களின் உரிமை உணர்வுகள் சிங்கள பேரினவாத அரசுகளினால் கொச்சைப்படுத்தப்பட்டமை மிகுந்த வேதனை தரும் விடயம் மட்டுமல்ல. அடுத்த கட்ட வழிமுறைகள் குறித்து விடுதலைப்புலிகளை மட்டுமல்லாது, முழுத் தமிழினத்தையும் சிந்திக்கவும் செயற்படவும் வைத்துள்ளது என்பது முக்கியமானதாகும்.

விடுதலைக்காக இழக்கப்பட்ட உயிர்களின் ஆன்மாக்கள் இன்னும் அமைதி பெறவில்லை. அவர்களது உறவுகளின் ஒப்பாரிகள் இன்னும் ஓயவில்லை. கட்டப்பட்ட கல்லறைகள் இன்னும் ஈரமாகவேயுள்ளது. நாங்கள் சிந்திய இரத்தமும், வியர்வையும், காயாத நிலத்தில் நின்று உயிர்ப்போடும் உரிமையோடும் செப்ரெம்பர் ஒன்றில் உலகை நோக்கிச் சொல்லுவோம்.

எமது உணர்வை தமிழ் பேசும் மக்களின் ஆழ் மன அபிலாசைகளை நாகரிகம் மிக்க சனநாயக செயல் முறையூடாக உரத்துச் சொல்லுவோம். சர்வதேசத்தின் மனக் கதவுகள் நிச்சயம் திறக்கும். எங்களின் விடுதலை நிச்சயம் கிடைக்கும் எனவே எமது மாவட்டத்தின் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் உணர்வோடும் தேசிய உரிமையோடும் அணி திரள வேண்டும் என்றார். (சோ)

# தேர்தலுக்கு முன்னதான நிலைமைகளை அவதானிக்க வெளிநாட்டுப் பார்வையாளர்!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் தொடங்குவதற்கு முன்னரான நிலைமைகளை அவதானிப்பதற்காக வெளிநாட்டு பார்வையாளர்கள் வருகை தரவுள்ளனர்.

வெளிப்படையான மற்றும் சுதந்திரமான தேர்தலுக்கான அமைப்பின் நிர்வாக இயக்குநர் கிங்ஸ்லி ரொட்ரிக்கோ இது குறித்து கூறியதாவது,

தேர்தல் தொடர்பான முன்னைய நிலைமைகளை அவதானிக்க ஐரோப்பிய, ஆசிய மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 14 நாடுகளின் பிரதிநிதிகள் சிறிலங்காவிற்கு வருகைதரவுள்ளனர்.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் முடிவடைந்த பிறகு 100 இற்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வெளிநாடுகளிலிருந்து வருகை தருவர்.

20 ஆயிரம் உள்ளூர் பார்வையாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர். எங்கள் அமைப்புக்குரிய அங்கீகாரத்தைத் தேர்தல் திணைக்களமும் வழங்கியுள்ளது என்றார் அவர்.

இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை நேற்றுமாலை இந்த அமைப்பின் குழுவினர் சந்தித்துப் பேசினர். நாளை காலை பத்து மணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை இந்த அமைப்பு சந்திக்கவுள்ளது. சிறிலங்கா அரசியல் சாசனத்தின் 17 ஆவது சரத்தின்அடிப்படையில் தன்னிச்சையான தேர்தல் திணைக்களம் ஒன்றை அமைப்பது தொடர்பாக இந்தச் சந்திப்புக்களின் போது முக்கியமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவது குறித்தும் இந்த அமைப்பினர் விவாதித்து வருகின்றனர். பல லட்சக்கணக்கானோருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராயப் படுகிறது.

# சனாதிபதித் தேர்தலின் பின்னர் உரிய வகையில் சமாதானம் முன்னெடுக்கப்படும்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் பின்னர் சமாதான முன்னெடுப்புகள் உரிய வகையில் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.சமாதான முன்னெடுப்புகள் தற்சமயம் அவதான நிலைக்கு சென்றுள்ளது இந்தநிலையில் ஐக்கிய தேசியக கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்றதன் பின்னர் ஏற்கனவே 2002 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து சமாதான முன்னெடுப்புகள் முன்னோக்கி கொண்டு செல்லப்படும் என அவர் குறிப்பிட்டார். (32)

## லெப்.கேணல்...

உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; அண்மையில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களை விடுதலைத் தீப் பொறிக்காக நாம் செவ்வி கண்ட போது நான் நீண்ட காலமாக தயார் படுத்திய கேள்வியைக் கேட்டேன்.

நீண்ட காலமாக நெருக்கடிகளுக்கு எப்படி முகம் கொடுக்கிறீர்கள். இதற்கான ஆற்றல்களை எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள் எனக் கேட்டேன்.

வரலாற்றுப் பட்டறிவில் இருந்து பெற்றுக் கொண்ட பாடங்கள்தான் என்னை இவ்வாறான நிலைக்கு உருவாக்கியது எனப் பதில் அளித்தார்.

எங்கள் கேள்விகளுக்கு எல்லாம் பதில் அளிக்கும் வகையில் தான் பொன்னகவை மலர் வெளி வந்துள்ளது.

நல்ல எண்ணங்கள் தேவை. நல்ல எண்ணங்கள் தான் செயலாக மாறும். நல்லசெயல்கள்தான் நல்ல பழக்கங்களாக மாறும். நல்ல பழக்கங்கள் தான் குணங்களாக மாறும். நல்ல குணங்கள்தான் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

நல்ல எண்ணங்கள், பட்டறிவு எப்படி பெற்றுக் கொள்வதென்றால் இந்த நூல் தெளிவாக விளக்கியுள்ளது எனவும் தெரிவித்தார். மாலை நான்கு மணியளவில் ஆரம் பித்த இந் நிகழ்வில் முதன்மைச் சுடரினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை மணலாறு கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றி வைத்தார். லெப். கேணல் ராஜன் அவர்களின் உருவப் படத்திற்கு வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

அரங்க நிகழ்வுகள்லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தலைமையில் இடம் பெற்றது.

மாவீரர் வணக்க நடனத்தைத் தொடர்ந்து லெப்.கேணல் ராஜன் அவர்கள் பற்றிய நினைவுரையினை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் நிகழ்த்தினார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் ஐம்பதாவது அகவையினையொட்டி தேசியத்தலைவர் பற்றிய போராளிகளின் ஆக்கங்களைத் தாங்கி உருவான பொன்னகவை மலரினை கடற்புலிப் போராளி குமரேசன் வெளியிட்டு வைக்க, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் பெற்றுக் கொண்டார். பொன்னகவை மலர் பற்றிய அறிமுக உரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க. வே. பாலகுமாரன் நிகழ்த்தினார். போராளிகள் மத்தியில் நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை தமிழீழநிதிப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கலைக் கொடி, இளங்குமரன், கேணல் ஜெயம், கேணல் தீபன், மருத்துவப்பிரிவுப்பொறுப்பாளர் ரேகா ஆகியோர் வழங்கினர்.

## படையினர்...

என சிறிலங்கா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இரவுரோந்துநடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டுதிரும்பிக்கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (32)

## சனாதிபதி...

யாப்பா அபயவர்த்தன ஆகியோரும், அதிகாரிகள் பலரும் இந்த விஜயத்தில் சனாதிபதியுடன் செல்கின்றார்கள். (32)

## தங்கள்..

அதிகாரப்போட்டி அவர்களின் காலம் காலமான நடைமுறை.

இந்த இலங்கைத்தீவினுடைய தேசிய இனப்பிரச்சினை, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எந்தவித அக் கறையும் இல்லை.

தங்களுடைய அதிகாரப் போட்டிகளைத் தான் தொடர்ந்து அவர்கள் முன்னிலைப்படுத்தி வருகிறார்கள். அந்தஅதிகாரப்போட்டியின் விளைவுதான் இப்பொழுது தேர்தல். இதைச் சமாதான காலத்தில் எங்கள் தேசம் கண்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலேயே ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்தன. பல இணக்கப்பாடுகள் காணப்பட்டன. யுத்த நிறுத்த அமுலாக்கத்தில் இருந்து பேச்சுக்களுடைய இணக்கப்பாட்டிலிருந்து எவ்வளவோ விடயங்களை அந்த அரசு நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.

காலத்தை இழுத்தடித்து ஒருவர் மீது ஒருவர் சாட்டி இப்படியே இழுத்தடித்துச் சென்றார்களேதவிர ஒரு தீர்வு வரவில்லை.

பின்பு சந்திரிகா அம்மையார் தான் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு வந்து மேலும் பல நெருக்கடிகளை உருவாக்கி ஒரு பாரதூரமான நிலைமைக்கு இந்தச் சமாதான முன்னெடுப்புக்கள் வந்துவிட்டது.

யுத்தநிறுத்த சூழலும் நெருக்கடிக்கு வந்துவிட்டது. இந்தச் சூழலில் அவர்களிடம் இருக்கின்ற அதிகாரப் போட்டியினுடைய ஒரு முடிவாக ஒரு தேர்தலுக்கான திகதி, காலம் நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இனி யார் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளார்கள். இந்தப் பேச்சுவார்த்தையை ஒரு பொருட்டாக மதிப்பார்களோ அல்லது ஒரு முக்கிய விடயமாக எடுப்பார்களோ என்பதை நம்பமுடியாதுள்ளது.

அதற்கு ஒரு உதாரணமாக அண்மையில் இரண்டு தினங்களுக்கு முன்பு சந்திரிகா அம்மையாரின் நெருக்கமானவரும், அந்த அரசில் முக்கிய பங்கு வகிக்கின்ற அமைச்சர் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்.

பேச்சுக்கள் என்பது போலியானது என்றும் ஒன்றும் நடக்காது என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்கள் இந்தப் பேச்சுக்கு இணக்கத்தைத் தெரிவித்துவிட்டு இழுத்தடித்துக் கொண்டு போகின்ற போக்கைக் கடைப்பிடிக்கின்றார்கள் போல் எங்களுக்குத் தெரிகிறது.

அவர்கள் இப்பொழுது நல்லதொரு காரணத்தை முன்வைக்கப் போகிறார்கள். தேர்தலைக் காட்டித் தமிழ் மக்களின் பிரச்சினையை மேலும் இறுக்கமாக்கப் போகிறார்கள். இன்னும் நெருக்கடிக்குள்ளாக்கப் போகிறார்கள். ஆகவே இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை எங்களுக்கோ, மக்களுக்கோ எந்தவொரு அக்கறையும் இல்லை.

ஆட்சித் தலைமைகள் மாறுவதால் மட்டும் பிரச்சினைக்குத் தீவு வரப்போவதில்லை. அர்ப்பணிப்புள்ள சிங்களத் தலைமை எப்பொழுதும் உருவாகப் போவதில்லை.

தமிழ் மக்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன். எங்களுடைய தலைவிதியை நாங்களே தீர்மானிக்கின்ற செயற்பாட்டுக்குள் நாங்கள் தீவிரமாக இறங்குவதைத்தவிர வேறு மாற்றுவழி இருக்கும் என்று நான் நம்பவில்லை.

பேச்சுக்கள் நடாத்த அரசாங்கம் இணக்கம் தெரிவித்து விருப்பம் தெரிவித்தபோது உடனடியாக எமது தேசியத் தலைவரும் இந்த யோசனைக்கு இணக்கப்பாட்டைத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த நடைமுறை குறித்துப் பேசுவதாயின் நாங்கள் பேசத்தயாராக இருக்கின்றோம் என்று நோர்வேத்திரப்பினருக்கு வலியுறுத்திக் கூறியிருந்தோம். ஏனெனில் இந்த யுத்தநிறுத்த உடன்பாடுதான் தற்போது நெருக்கடி நிலைக்குள்ளாக்கப் பட்டுள்ளது. யுத்தநிறுத்த உடன்பாட்டின் விதிமுறைக்கு மாறாக இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களின் வன்முறைகள், கொலைகள், எமது போராளிகள் மீதான தாக்குதல்கள் என்று பல யுத்த நிறுத்த மீறல்களைச்சிறிலங்கா படைத்தரப்பே ஆயுதக் குழுக்களை வைத்துச் செய்துகொண்டிருக்கிறது.

முக்கியமாக பொதுமக்கள் வாழும் பகுதிகளில் இருந்து சிறிலங்கா இரா ணுவம் வெளியேறி மீண்டும் எமது மக்களைக் குடியேற்றி இயல்பு நிலையைக் கொண்டு வருவது, மக்கள் மீதான இராணுவ நெருக்கு வாரங்களைத் தணிக்கின்ற நடவடிக் கைகள் எதுவுமே இந்த மூன்றரை வருட காலத்தில் நடைபெறவில்லை.

அவை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் சிறிலங்கா படைத்தரப்பும், அரசாங்கமும் இதுவரை மறுதலித்து இந்த நிலைமையைக் குழப்புகின்ற சூழலில் தான் இருந்தது.

அந்த நிலையில் தான் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலையில் அவர்கள் ஒரு பேச்சுவார்த்தைக்கு அதுவும் யுத்தநிறுத்த நடைமுறை பற்றிய பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயாராக இருப்பதாக நோர்வேத் தரப்பினூடாக எங்களுக்குத் தெரிவித்தனர்.

உடனடியாக எங்களுடைய தலைவர் எந்தவொரு கால தாமதமும் இல்லாது உடனடியாக நாங்கள் இந்தப் பேச்சுக்களைத் தொடங்கத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

அதுவும் ஒரு நடுநிலைமையான நாடான நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடத்துகிற சாத்தியம் பற்றி எங்களுடைய ஆலோசனையை முன்வைத்திருந்தோம்.

ஆனால் தற்பொழுது வந்திருக்கின்ற செய்திகளின் அடிப்படையில் அவர்கள் வெளிநாடுகளில் இந்தப் பேச்சுவார்த்தைகளை முன் வைப்பதை தாங்கள் விரும்பவில்லை என்றும்,அது வெளிநாடுகளில் தமிழ் மக்களின் தங்களுடைய நியாயத்தை-விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடர்பாகவும், களநிலவரம் தொடர்பான உண்மை நிலைகளை நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்லுகின்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிடுவோம் என்ற அச்சம் காரணமாகத்தான் அது தவிர்க்கப்பட்டுள்ளதாகச் செய்திகளில் வருகிறது.

உண்மையிலேயே இதை வைத்துக்கொண்டு சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உண்மை நிலைமைகளைமூடி மறைத்துத் தங்களுடைய பிரச்சார நடவடிக்கைகளை நம்பவைக்க முயலுகின்றார்கள் என்பதற்கு நல்ல உதாரணம்.

இதை நாங்கள் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாக்க இருக்கின்றோம்.

அண்மைக் காலமாக எங்களுடைய தலைமைப் பீடம் எடுத்த நல்லெண்ண நடவடிக்கை அனைத்தையும் உதாசீனப்படுத்தி இந்த சமாதான சூழலைச் சீருலைத்து யுத்த நிறுத்த சூழலை நெருக்கடிக்கு உள்ளாக்கி ஒரு பாரதூரமான நிலைமைகளை உருவாக்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம்தான் காரணமாக இருந்துகொண்டிருக்கிறது.

நாங்கள் திட்டவட்டமாக எங்களுடைய மறுப்பை ஏற்கனவே தெரிவித்திருக்கின்றோம். அதாவது இராணுவ சூனியப்பிரதேசத்திற்குள் பேச்சுக்களைமுன்னெடுக்க முடியாது. எங்களுடைய நிர்வாகப் பகு திக்குள் அதாவது கிளிநொச்சி போன்ற எங்களுடைய பாதுகாப்பான பிரதேசத்தினுள் தான் இந்தப் பேச்சுக்களை முன்வைக்கலாம் என்ற ஆலோசனையைக் கொடுத்திருக்கின்றோம்.

நோர்வேத் தரப்பு இது தொடர்பாக கருத்துப்பரிமாறிக் கொண்டிருக்கின்றது. இது சம்பந்தமாக தீர்க் கமானமுடிவுகள் எங்களுக்கு கிடை க்கப்பெறவும் இல்லை. நாங்களும் எங்களுடைய தீர்க்கமான நிலைப் பாடுகளை அடுத்தகட்டமாகத் தெரி விக்கவும் இல்லை. ஆகவே இனி வரும் நாட்களில் நோர்வே அனுசரணையாளர்களின் ஊடாக வருகின்ற செய்திகளின் அடிப்படையில் தான் நாங்கள் தீர்மானங்களை எடுக்க இருக்கின்றோம் எனத்தெரிவித்தார்.

நோர்வேயில் பேச்சுக்களை நடாத்த ஏன் அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தது எனக் கேட்டபோது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தூதுக்குழு வெளிநாடுகளுக்கு செல்லுமாக இருந்தால் தங்களுடைய பொய்ப்பிரச்சாரம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பழி சுமத்துகின்ற தவறான பிரச்சாரங்களை முறியடித்துவிடுவார்கள் என்ற பயம்தான் சிறிலங்கா அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தைச் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை தணிக்கவே இப்படியான ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டு இதைத் தட்டிக் கழிப்பதுதான் நோக்கமா என்கின்ற சந்தேகங்கள் எழுகின்றன.

பேச்சுக்கு அவர்கள் அழைத்தார்கள். நாங்கள் உடனடியாக வரத்தயாராக இருக்கின்றோம் என அறிவித்தோம்.

அதற்குப் பிறகு புதிய புதிய நிபந்தனைகளைப் போட்டு தட்டிக் கழிக்கின்ற போகின்ற போக்கு சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி அதாவது இந்தச் பேச்சுக்களுக்கான விருப்பமின்மையையும் தட்டிக் கழிப்பினூடாக இழுத்தடித்துக் கொண்டு சென்று நிலைமையை மோசமாகக்குகிற செயலோ என்கிற சந்தேகம் இப்பொழுது எங்களுக்கு எழுந்துள்ளது எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களை அரசாங்கம் மறுத்தால் உங்களின் நிலைப்பாடு என்ன எனக் கேட்டபோது,

நாங்கள் ஏற்கனவே எங்களுடைய யோசனைகளைக் கெடுத்துவிட்டோம். ஏதாவது ஒரு வெளிநாட்டில், நடுநிலைமையான விடுதலைப் புலிகளைத் தடை செய்யாத ஒரு நடு நிலைமையான நாடொன்றில் பேசலாம்.

அல்லாவிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண பாதுகாப்பிற்குள் ஆட்சிக்குட்பட்ட கிளிநொச்சி நகரில் வைத்துப் பேசலாம் என்ற ஆலோசனையைக் கொடுத்துள்ளோம்.

சூனியப்பிரதேசத் திற்குள் வைத்து பேச வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எங்களுக்கு நோர்வே தரப்பினால் பதில் கிடைத்தவுடன் எங்களுடைய தலைவருடன் கலந்தாலோசித்துத்தான் நாங்கள் ஒரு முடிவை அறிவிப்போம் என்றார்.

**செப்ரெம்பர்-01 இல் கிளிநொச்சியில்**
**வான்முட்டும் ஓசையுடன்**
**முழங்கட்டும் மக்கள் எழுச்சி**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.